## (ஊ) மாதிரி நடைமுறை அளவீடுகள்

நான்கு மதிப்பீடுகள் முடிவுற்றன. அத்துடன் 1974இல் புதிய அளவீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பின்வரும் அளவீடுகள் முடிவுற்றன.

1. உடவளவைத் தொழில் நுட்ப - பொருளாதார அளவீடு.
2. மகாவலி அபிவிருத்திப்பகுதியின் வளர்ச்சியினது நிலை பற்றிய ஒரு தொடக்க நிலை.
3. இலங்கையில் தொழிற்படை கலந்து கொள்ளல் அளவுகளின் வரையறை மீதான அளவீடு.
4. நுகர்வோன் நிதியின் அளவீடு 1973.

பின்வரும் புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது

**1. உடவளவைப் பகுதியின் தொழில் நுட்ப - பொருளாதார அளவீடு**

உடவளவைத் திட்டப்பகுதியின் தொழில் நுட்ப - பொருளாதார அளவீடு ஒட்டிய வெளிக்கள வேலை 1973இல் தொடங்கப்பட்டு 1974, டிசெம்பரில் முடிவுற்றது. இவ் அளவீட்டுக்கான முதன்மையான காரணம் பொருளாதார முதன்மைக்குத் தொடர்புடைய மனித பௌதீக மூலவளங்கள் பற்றி அளவீடு செய்வதற்கும் பண்ணைப் பொருளாதாரத்துடன் தொடர்புடைய சிக்கல்களைப் பகுத்தாய்ந்து காண்பதற்குமாகும்.

அளவீடு செய்யப்பட்ட காலப்பிரிவில், முதன்மையான பயிர்களது உற்பத்திச் செலவுமீதான செய்திகள், தொழிலமைவு, கமக்காரர்களின் வருமானமும், செலவும், கல்வியும் நலமும் பற்றிய வசதிகள் என்பனவற்றைத் திரட்டுவதற்கு சில கமக்காரர்களை நேரில் சென்று கண்டோம். சேகரிக்கப்பட்ட தரவுகள் தற்பொழுது முறைப்படுத்தப்படுகின்றன.

**2. மகாவலி அபிவிருத்திப் பகுதியின் வளர்ச்சியினது நிலைபற்றிய தொடக்க நிலை அளவீடு**

1974இல் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்திப் பகுதியின் வளர்ச்சியின் நிலை பற்றிய மதிப்பீடு, 15 மாதிரிக் கிராமங்களிலிருந்தும், 5 குடியேற்றத் திட்டங்களிலிருந்தும், சமுதாயப் புள்ளி விபரம், கல்வி, தொழிலமைவு, வீட்டு வசதி, ஏனைய பணி நிலையங்கள், போக்கு வரத்து வ்சதிகள், நிலப்பயன்பாடு பயிர்ச்செய்கை முறைகள் நீர்வசதி, நிலையானதும் சேனைப்பயிர்ச் செய்கையிலிருந்தும் வருமானம் தோட்டப் பயிர்கள், கிராமத் தலைமை என்பன மீதான தரவுகளைச் சேகரித்தது.

மதிப்பீட்டுத் தரவுகளின்படி முறைப்படுத்தல் முடிவுற்றன. எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் அறிக்கை 1975இன் காலப்பிரிவில் வெளியிடப்படும்.

3. இலங்கையிற் தொழிற்படை கலந்து கொள்ளல் அளவுகளின் வரையறை மீதான அளவீடு

பன்னாட்டுத் தொழில் அமைப்பிற்கு அழைப்பின்பேரில் பொருளாதார ஆராய்ச்சியின் பணிப்பாளர் இலங்கையில் தொழிற்படை கலந்து கொள்ளல் அளவுகளின் ஆராய்ச்சி ஒன்றின் நோக்கத்தினைச் சுட்டிக்காட்டி ஆய்வு எடுத்துரைப்பு ஒன்றினை வாசித்தார். இறுதியில் பன்னாட்டுத் தொழில் அமைப்பால் இவ்வெடுத்துரைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை இவ் ஆராய்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஒப்புதல் அளித்தது. இவ்வாறு, இலங்கையில் தொழிற்படை கலந்து கொள்ளல் அளவுகளின் மீதான மாதிரி அளவீடு 1973 யூலை 1 இல் தொடக்கப்பட்டது. இவ் அளவீடு 1973ன் இறுதியில் முடிவுற்று, இறுதி அறிக்கை 1974ல் வெளியிடப்பட்டது.

4. நுகர்வோன் செலவின் அளவீடு 1973

1973ன் நுகர்வோன் செலவின் அளவீடு, மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய அளவீடுகளில் மூன்றாவதாகும். முன்னைய அளவீடுகள் 1953 இலும் 1963இலும் மேற்கொள்ளப்பட்டன. 1973ம் ஆண்டின் அளவீட்டினது காணல்களின் விரிவான பொழிப்புகள் கடந்த ஆண்டறிக்கையில் தரப்பட்டுள்ளதுடன் அளவீட்டின் இறுதி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

5. இலங்கையின் நிலத்தினதும் தொழிலாளர் பயன்பாட்டினதும் மீதான அளவீடு

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட நிலத்தினதும் தொழிலாளர் பயன்பாட்டினதும் அளவீட்டின் மீதான தொடக்க வேலைகள் 1974ம் ஆண்டு நவம்பரில் தொடங்கப்பட்டன. இவ் அளவீடு தீவு முழுவதையும் உள்ளடக்கியதுடன் இரண்டு கிழமை காலப்பிரிவினை உள்ளடக்கியிருந்தது. இவ்வளவீட்டில் பெறப்பட்ட செய்திகள் 1975 சனவரி 15 இல் தொடக்கப்பட்ட இலங்கையின் நிலத்தினதும் தொழிலாளர் பயன்பாட்டின் மீதான முதன்மையான அளவீட்டுக்கான முறைகட்கு அமைப்பாயின. இவ் அளவீட்டுடன் தொடர்புடைய களவேலைகள் 1975 சனவரியில் தொடங்கப்பட்டு 1975 மாச்சில் முடிவுற்றன. தரவுகள் படிமுறைப்படுத்தப்படுகின்றன. இறுதி அறிக்கை ஆண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.